**இளைஞர் அணியில் கிளை - வார்டு - பாகங்களில், புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் 5 இலட்சம் நிர்வாகிகளை வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிக்கும், 'களத்தில் இளைஞர் அணி' என்ற முன்னெடுப்பில், பங்கேற்கச் செய்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டங்களில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 23/03/2026 அன்று கோவை, ஈரோடு, கரூர் மாவட்டங்களில் கலந்துகொண்டபோது எடுக்கப்பட்ட புகைப்படத்தொகுப்பு.**




● கோவையில் நடைபெற்ற கோவை மாநகர் - வடக்கு - தெற்கு மற்றும் நீலகிரி ஆகிய கழக மாவட்டங்களைச் சார்ந்த இளைஞர் அணி மாவட்ட - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.




● ஈரோட்டில் நடைபெற்ற ஈரோடு வடக்கு - தெற்கு - மத்திய மற்றும் நாமக்கல் கிழக்கு - மேற்கு ஆகிய கழக மாவட்டங்களைச் சார்ந்த இளைஞர் அணி மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார்.






● ஈரோடு, மொடக்குறிச்சியில் அமைக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் மண்டல அலுவலகமான 'அன்பகம் உதயம்' கட்டடத்தைப் பார்வையிட்டு, அங்கு நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மலர் தூவி மரியாதை செய்து, கலைஞர் நூலகத்தையும் பார்வையிட்டார்.




● கரூரில் நடைபெற்ற, திருப்பூர் கிழக்கு - வடக்கு - தெற்கு - மத்திய - மற்றும் கரூர் ஆகிய கழக மாவட்டங்களைச் சார்ந்த இளைஞர் அணி மாவட்ட - மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.






சென்னை தெற்கு மாவட்டம் சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் சோழிங்கநல்லூரில் பகுதி கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்தரமேஷ் தலைமையில், மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் கா.சோமு, எஸ்.குணசேகரன், பாலவாக்கம் தா.விசுவநாதன், நா.சந்திரபாபு, எஸ்.வி.ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், கோவிலம்பாக்கம் ஜி.வெங்கடேசன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



கோவை மேற்கு மண்டல கழக அலுவலகத்தில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பி.எஸ். அணியை சேர்ந்த மாவட்ட செயலாளர்கள் மோகன்ராஜ், குணாளன், அ.தி.மு.க. ஜெ பேரவை செயலாளர் முருகேசன், 27வது வட்டசெயலாளர் எஸ்.பி.எல்.ராஜேந்திரன், மாநில மகளிரணி துணைச்செயலாளர் ரஜினாபேகம், ஓ.பி.எஸ். அணி மாநகர் மாவட்ட பொருளாளர் விஸ்வநாதன், மாநில பொதுக்குழு உறுப்பினர் பூச்சியூர் செல்வராஜ் உள்பட 300க்கும் மேற்பட்டோர் கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் கோவை மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன், தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன், வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.